# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 23, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. முதல்வரின் உணவுத் திட்டத்தின் காலை பெயர் மாற்றப்பட்டு, முன்னாள் முதல்வர் காமராஜரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
   - i. கடந்த 2022-ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினால் தொடங்கப்பட்ட 'முதல்வரின் காலை உணவுத் திட்டம்' இனி 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்' என்று அழைக்கப்படும்.
   - ii. முந்தைய ஆட்சியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தை 6 முதல் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்த முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவிட்டிருந்தார். இதற்கான அரசாணையை முன்னாள் முதல்வர் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15-ஆம் தேதி மகளிர் உரிமைத் துறை வெளியிட்டது.
   - iii. தற்போது, தமிழகம் முழுவதும் 37,447 அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 19,34,230 மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.
   - iv. இந்தத் திட்ட விரிவாக்கத்துக்காக ஆண்டுதோறும் ரூ.343.55 கோடி கூடுதல் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டுக்காக அரசு ரூ.217.63 கோடியை ஒதுக்கியுள்ளது. புதிதாக விரிவுபடுத்தப்பட்ட காலை உணவுத் திட்டம், பெரியார் பிறந்த நாளான செப். 17 முதல் நடைமுறைக்கு வரும் என்று தமிழக அரசு வெளியிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி காவிரியிலி ருந்து தர வேண்டிய தண்ணீரைத் திறந்துவிட உத்தரவிடுமாறு தமிழகம் வலியுறுத்திய நிலையில், கர்நாடக அரசு பெங்களூ ருநகருக்கு குடிநீர்த் தேவை இருப்பதாகக் கூறியதால் தில்லியில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

i. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் (சிடபிள்யுஎம்ஏ) 53- ஆவது கூட்டம் அதன் தலைவர் எஸ். கே. ஹல்தர் தலைமையில் நடைபெற்றது.

ii. இது குறித்து நடைபெற்ற நீண்ட நேர விவாதத்துக்குப் பிறகு, மழைப் பொழிவு மற்றும் நீர்வரத்தை மேலும் ஒரு வார காலம் கண்காணிக்கவும், அதன் பின்னர் மாநிலங்கள் முன்வைக்கும் கருத்துகள் மற்றும் நீரியல், வானிலை சார்ந்த சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, ஜூலை 28-ஆம் தேதி நடைபெறவுள்ள காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு கூட்டத்தில் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய விகிதாசார நீர்ப் பங்கு தீர்மானிக்கப்படும் என ஆணையம் முடிவு செய்தது என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. ஐரோப்பிய யூனியனில் முதல்நாடாக பிரான்ஸில் 15 வயதுக்குட்பட்ட சிறார்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு முழுமையாக தடை விதிக்கும் சட்டமசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

i. மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் கைப்பேசி பயன்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ள இச்சட்டத்தை, புதிய கல்வியாண்டு தொடங்கும் வரும் செப்டம்பர் முதல் நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

ii. இருப்பினும், இத்தடையில் இருந்து இணைய தகவல் களஞ்சியங்கள், கல்வி மற்றும் அறிவியல் சார்ந்த வலைதளங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4. பொருளாதாரத் தடைகள் மூலம் கியூபா அரசுக்குத் தொடர்ந்து நெருக்கடி அளித்து வரும் அமெரிக்கா, அந்நாட்டு மக்களுக்கு நேரடியாக உதவும் வகையில் உணவு, சுகாதாரப் பொருள்களை அனுப்பி வைத்தது.

i. முன்னதாக, கியூபாவுக்காக அமெரிக்கா அறிவித்த 10 கோடி டாலர் மனிதாபிமான உதவித்திட்டத்தின் முதல்கட்டமாக, 6 கோடிடாலர் மதிப்பிலான உதவிகள் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ii. கியூபா அரசு அதிகாரிகளைத் தவிர்த்துவிட்டு, உதவிப் பொருள்களை கத்தோலிக்க அமைப்புகளின் மூலம் பொதுமக்களுக்கு நேரடியாக விநியோகிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

5. ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில், 23- ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் வியாழக்கிழமை (ஜூலை 23) தொடங்குகின்றன.

i. வரும் ஆகஸ்ட் 2-ஆம் தேதி வரை 11 நாள்களுக்கு நடைபெறவுள்ள இந்தப்

போட்டிகளில், 74 நாடுகளைச் சேர்ந்த 3,000 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். மொத்தம் 10 விளையாட்டுகள், 4 இடங்களில் நடைபெறவுள்ளன. அத்துடன், மாற்றுத்திறனாளிகளுக்கான 6 பாரா விளையாட்டுகளும் சேர்த்து நடத்தப்படவுள்ளது.

ii. இந்தியா சார்பில் 78 வீரர்கள், 48 வீராங்கனைகள், 65 அலுவலர்கள் உள்பட மொத்தம் 191 பேர் கொண்ட குழு பங்கேற்கிறது. பிரபல நட்சத்திரங்களான நீரஜ் சோப்ரா (ஈட்டி எறிதல்), மீரா பாய் சானு (பளுதூக்குதல்), லவ்லினா போர்கோஹெய்ன் (குத்துச் சண்டை), குர்விந்தர் சிங், அனி மேஷ் குஜுர், முரளி ஸ்ரீசங்கர் (தடகளம்) உள்ளிட்டோர் அதில் முக்கியமானவர்கள்.

iii. விளையாட்டுகள் குறைப்பு:

- வழக்கமாக 20-க்கும் மேற்பட்ட விளையாட்டுகள் காமன்வெல்த் போட்டிகளில் இடம்பெறும் நிலையில், இம்முறை தடகளம், நீச்சல், டிராக் சைக்கிளிங், ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ், குத்துச் சண்டை, ஜூடோ, பௌல்ஸ், பளுதூக்குதல், நெட்பால், 3*3 கூடைப் பந்து ஆகிய 10 விளையாட்டுகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன.
- பாரா தடகளம், பாரா நீச்சல், பாரா டிராக் சைக்கிளிங், பாரா பௌல்ஸ், பாரா பவர்லிஃப்டிங், 3*3 வீல்சேர் கூடைப்பந்து ஆகிய 6 பாரா விளையாட்டுகளும் நடை பெறவுள்ளன.
- செலவுக் குறைப்பு நடவடிக்கையாக ஹாக்கி, துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம், பாட்மின்டன், டேபிள் டென்னிஸ் போன்ற இந்தியா பல மிக்கதாக இருக்கும் பல விளையாட்டுகள் நீக்கப்பட்டுள்ளது, அணியின் பதக்க எண்ணிக்கையை பாதிக்கும் வகையில் உள்ளது.

iv. மன்னர் சார்லஸ், ராணி கமீலா பங்கேற்பு:

- ஒ.வி.ஓ. ஹைட்ரோ மைதானத்தில் நடைபெறும் தொடக்க விழாவில் இங்கிலாந்து மன்னர் சார்லஸ், அரசி கமீலா, ஸ்காட்லாந்தின் பிரபல தடகள் வீரர் கிறிஸ் ஹாய் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்கின்றனர். போட்டிகளில் பங்கேற்கும் 74 நாடுகளின் பேட்டன்கள் முதன்முறையாக கிளாஸ்கோவில் கொண்டு வரப்படுகின்றன.

v. வரலாறு:

- பிரிட்டிஷ் பேரரசின் ஆளுகையில் இருந்த நாடுகள் அனைத்தும் 'காமன்வெல்த் நாடுகள்' என அழைக்கப்பட்டன. அந்த நாடுகள் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டியே 'காமன்வெல்த் போட்டிகள்' என்று

அழைக்கப்படுகிறது. முதல்முறையாக 1930–இல் 'பிரிட்டிஷ் பேரரசு போட்டிகள்' என அழைக்கப்பட்டு, பின்னர் 1974 வரை 'பிரிட்டிஷ் காமன்வெல்த் போட்டிகள்' என அழைக்கப்பட்டது.

- 1978-இல் போட்டிகள்' 'காமன்வெல்த் என மாற்றப்பட்டது. ஒலிம்பிக், ஆசிய போட்டிகளுக்கு அடுத்து உலகில் நடைபெறும் பெரிய போட்டியாக காமன்வெல்த் போட்டிகள் உள்ளது.

vi. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை:

- காமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பு சார்பில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தப் போட்டிகள், இதுவரை 9 நாடுகளைச் சேர்ந்த 20 நகரங்களில் நடை பெற்றுள்ளன. அதிகபட்சமாக ஆஸ்திரேலியா 5 முறை இப்போட்டிகளை நடத்தியுள்ளது. தற்போது கிளாஸ்கோ நகரம் 2-ஆவது முறையாக இப்போட்டிகளை ஒருங்கிணைக்கிறது.
- முதன்முறையாக 1930-இல் கனடாவின் ஒன்டாரியோ, ஹாமில்டனில் போட்டி தொடங்கியது. 400 வீரர்கள் பங்கேற்றனர். இந்தியாவில் முதன்முறையாக 2010-இல் புது தில்லியில் இந்தப் போட்டி அப்போதைய மதிப்பில் ஏறக்குறைய 1,100 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில் நடைபெற்றது. 71 நாடுகளில் இருந்து 6,081 பேர் பங்கேற்றனர்.
- 2026 போட்டி ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்த நிலையில், நிதித் தட்டுப்பாட்டால் அந்த நகரம் போட்டியை நடத்த இயலாது என அறிவித்தது. இதையடுத்து ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் போட்டி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

6. நீதிபதிகளின் ஓய்வு வயதை 60-இல் இருந்து 61- ஆக உயர்த்துவது குறித்து பரிசீலிக்கும்படி அனைத்து மாநில, யூனியன் பிரதேச அரசுகளை உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

i. உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 65-ஆகவும், உயர்நீதி மன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 62-ஆகவும் உள்ளது. அதேநேரத்தில் பிற நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வு வயது மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. இதைச் சுட்டிக்காட்டி, நாடு முழுவதும் அனைத்து மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு வயதை ஒரே மாதிரியாக 61- ஆக அறிவிக்கும்படி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு, உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய

பாக்சி, வி. மோகனா ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

ii. அப்போது வாதங்களைக் கேட்டு விட்டு நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

- இந்த விவகாரத்தில் (நீதிபதிகளின் ஓய்வு வயதை அதிகரிப்பது) அனைத்து மாநில அரசுகள், யூனியன் பிரதேச அரசுகளும் தங்களது அதிகார வரையறைக்கு உட்பட்ட உயர்நீதிமன்றங்களுடன் கலந்தாலோசனை நடத்தி, இதுகுறித்து முடிவெடுக்கும்படி உத்தரவிடப்படுகிறது.
- அப்போது அவர்கள் ஒப்புக்கொண்டால், அந்த மாநிலங்களில் பணிபுரியும் நீதிபதிகள் 61 வயது வரை பணிபுரிய அனுமதிக்கப்பட வேண்டும். இந்தப் பணி நீடிப்பு, இந்த வழக்கு விசாரணையின் இறுதி முடிவுக்கு உட்பட்டதாக இருக்கும். இந்த விதி, 2026 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.
- நாடு முழுவதும் உள்ள மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு வயதை 60-இல் இருந்து 62-ஆக உயர்த்த வேண்டுமா என்ற முக்கிய சட்ட விவகாரத்தின் மீதான இறுதித் தீர்ப்பை இந்த இடைக்கால ஏற்பாடு பாதிக்காது. மாநிலங்களோ அல்லது உயர்நீதி மன்றங்களோ எடுக்கும் நிலைப்பாட்டை பொருட்படுத்தாமல், ஆரம்பத்தில் வகுக்கப்பட்ட சட்டம் குறித்து உச்ச நீதிமன்றமே சுதந்திரமாக முடிவு செய்யும்.
- அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்றங்களுடன் நீதிபதிகளின் ஓய்வு வயதை 61-ஆக உயர்த்து வது குறித்து ஆலோசனை நடத்தி, தங்களது அறிக்கையை 2 வாரங்களுக்குள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

7. அஸ்ஸாமில் இடைவிடாத பலத்த மழையால் பல்வேறு மாவட்டங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. மழை தொடர்பான அசம்பாவித சம்பவங்களில் மேலும் 10 பேர் உயிரிழந்ததையடுத்து, இறப்பு எண்ணிக்கை 31-ஆக அதிகரித்துள்ளது.

i. மழை-வெள்ளத்தால் சிவசாகர், விஸ்வநாத், சராய்தேவ், தேமாஜி, திப்ரூகர், கோலாகாட் ஜோர்ஹாட், காமரூப், கர்பி ஆங்லாங், நகோன் தின்சுகியா உள்ளிட்ட மாவட்டங்களில் 5.65 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, சிவசாகர் மாவட்டம் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இங்கு மட்டும் 3.6 லட்சத்துக்கும் மேற்பட்டோர்

பாதிக்கப்பட்டுள்ளனர்.

8. அமெரிக்காவில் மூலக்கூறு மருந்துகளின் (ஜெனரிக் மெடிசின்) இறக்குமதிக்கு தற்போது எந்த வரியும் விதிக்கப்படாத நிலையில், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 100 சதவீதமும், அதற்கடுத்த ஆண்டில் இருந்து 200 சதவீதமும் வரி விதிக்க அந்நாடு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை அதிபர் டொனால்ட்டிரம்ப் வெளியிட்டார்.

i. "அமெரிக்காவுக்கு அதிக அளவில் மூலக்கூறு மருந்துகளை ஏற்றுமதி செய்யும் நாடு என்ற அடிப்படையில் மேற்கண்ட திட்டத்தால் இந்தியா கடும் பாதிப்பை எதிர்கொள்ளக்கூடும் என்ற கவலைகள் எழுந்துள்ளன.

ii. உள்நாட்டில் மூலக்கூறு மருந்துகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கிலான இத்திட்டம் குறித்து ட்ரூத் சோஷியல் சமூக ஊடகத்தில் டிரம்ப் பதிவிட்டார். அதில், 'அமெரிக்காவில் அனைத்து மூலக்கூறு மருந்துகளின் இறக்குமதி வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதிமுதல் அடுத்த 2 ஆண்டுகளுக்கு எந்த வரியுமின்றி தொடரும். பின்னர், ஓராண்டுக்கு 100 சதவீத வரி விதிக்கப்படும். அதன் பிறகு 200 சதவீதமாக உயர்த்தப்படும்.

iii. மூலக்கூறு மருந்துகளின் உற்பத்தியை உள்நாட்டில் மேற்கொள்ளவே இந்த வரி விதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அமெரிக்காவுக்குள் உற்பத்தி ஆலைகள் மற்றும் உபகரணங்களை அமைக்கத் தவறும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும். அமெரிக்க மக்களின் நலன்களைக் காப்பதே இக்கொள்கையின் நோக்கம்' என்று தெரிவித் துள்ளார்.

iv. மூலக்கூறு மருந்துகள் என்பவை வணிகப் பெயர் கொண்ட (பிராண்டட்) மருந்துகளில் உள்ள அதே மூலப்பொருள், வீரியம் மற்றும் செயல்பாட்டைக் கொண்டவை. ஆனால், விளம்பரம், சந்தைப்படுத்துதல் செலவுகள் இல்லாததால் மலிவு விலையில் கிடைக்கின்றன.

v. இந்தியாவுக்கு பாதிப்பு:

- 'உலகின் மருந்தகம்' என்று வர்ணிக்கப்படும் இந்தியா, பல்வேறு நாடுகளுக்கு மருந்துகளை அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறது. அமெரிக்காவுக்கு மூலக்கூறு மருந்துகளை அதிகம் ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா விளங்குகிறது.
- கடந்த ஆண்டில் இந்தியாவில் இருந்து உலக நாடுகளுக்கு 25.8 பில்லியன்

டாலர் மதிப்பிலான மருந்துகள் ஏற்றுமதியாகியுள்ளன. இதில் 38 சதவீதம் அதாவது 9.7 பில்லியன் டாலர் அளவுக்கு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மூலக்கூறு மருந்துகள் தேவையில் 47 சதவீதம் இந்தியாவால் பூர்த்தி செய்யப்படுகிறது.

- ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு 4.05 பில்லியன் டாலர் அளவிலான மருந்துகளை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது. உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், புற்று நோய், தொற்றுநோய்கள் மற்றும் மனநல பாதிப்புகளுக்கு இந்திய மூலக்கூறு மருந்துகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- இதுபோன்ற சூழலில், அமெரிக்காவின் வரி விதிப்பு திட்டம் இந்தியாவின் மருந்து ஏற்றுமதி சந்தையில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று துறை சார் ஆய்வு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.